DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I,
USILAMPATTI.

Calendar

Miscellaneous
Preliminary Register

CASE No: C.C. No. 183/12

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 6 |
| Name | : | Sunil Kumar |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.19

முதல் விசாரணை:

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என் சொந்த ஊர் கேரளா மாநிலம் பாலக்காடு. நான் கொங்கபட்டியில் உள்ள காமேஸ் கார் ஒர்க் ஷாப்பில் எலெக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறேன். அதன் உரிமையாளர் தனிக்கொடி ஆவார். சாட்சி செந்தில் குமார் என்பவர் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு மாருதி ஆம்னி வண்டியை வேலை பார்ப்பதற்காக எங்கள் ஒர்க் ஷாப்பில் விட்டிருந்தார். நாங்கள் அந்த வேலையை முடித்து இரவு 12.00 மணி அளவில் அந்த வண்டி ஒர்க் ஷாப் முன்பு நின்றிருந்தது. செந்தில்குமாருக்கு வேலை முடிந்த விபரத்தை தகவல் சொன்னதற்கு அவர் மறுநாள் வந்து எடுத்துக் கொள்வதாக சொன்னார். மறுநாள் காலையில் நான் 7.00 மணி அளவில் ஒர்க் ஷாப்புக்கு வந்தபோது செந்தில்குமார், தனிக்கொடி மற்றும் ஒரு வேலை ஆளும் இருந்தனர். அப்பொழுது வண்டி காணாமல் போயிருந்தது. யார் திருடிச் சென்றார் என்று அப்போது தெரியவில்லை. அதன்பின்பு 3 மாதம் கழித்து மதுரை சந்தையில் அந்த வண்டி நின்றிருந்தது. அங்கு சென்ற எங்கள் மெக்கானிக் வண்டியை அடையாளம் கண்டு சொன்னார். வண்டி வந்தபிறகு அதனை

விக்கிரமங்கலத்தைச் சார்ந்த 2 நபர்கள் தள்ளிச் சென்றதாக தெரியவந்தது.அவர்கள் யார் என்று தெரியவில்லை. சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் செந்தில்குமார் புகார் கொடுத்திருந்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

எங்கள் ஒர்க் ஷாப் மதுரை தேனி சாலையில் வடக்குப்புறம் தெற்குப்பார்த்த வாசல் உள்ளது என்றால் சரிதான். சற்று தள்ளி சில்லாம்பட்டி செல்லும் சாலை உள்ளது. ஒர்க் ஷாப்புக்கு மேற்கே கிரின்பார்க் பள்ளி மற்றும் குடியிருப்புக்கள் உள்ளது. நானும் மெக்கானிக் அன்புவும் அன்றைய தினம் இரவுப் பணி செய்தோம். அப்போது உரிமையாளர் இல்லை. வீட்டிற்கு சென்றுவிட்டார். வேலை முடித்து அன்புவும் நானும் தூங்கி விட்டோம். எங்கள் இருவருக்கும் காரை யார் திருடியது, எப்போது திருடப்பட்டது விபரம் எங்களுக்கு தெரியாது. திருடு போன அன்றே அசா1வுடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். நானும் உடனிருந்தேன். மதுரை சந்தையில் ஒர்க் சாப்புக்கு வேண்டிய பழைய சாமான்கள் வாங்க சென்றிருந்த அன்பு தான் வண்டியை அங்கு பார்த்து கூறினார். அதன்பிறகு நான், உரிமையாளர், மற்றும் அன்பு ஆகியோர் மறுநாள் சென்று வாகனத்தை எங்கள் செட்டிற்கே எடுத்து வந்தோம்.அந்த விபரம் மட்டும் தான் தெரியும். அதன்பிறகு வாகனம் சம்பந்தப்பட்ட வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

/Sd./ Sunil kumar

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.